**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 06/2021**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 22.08.2025 | தகப்பனார் பெயர்: | சாம்பசிவம் |
| பெயர்: | இளங்கோவன் (PW–1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | பூம்புகார் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 70/2025 |

**முதல் விசாரணை : 22.08.2025**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 19.05.1963 தேதியிட்ட எனது தந்தை சாம்பசிவத்திற்கும் எனது சித்தப்பா மகாலிங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 26.08.2019 தேதியிட்ட கணினி பட்டா கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 18.09.2020 தேதியிட்ட நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல்

அட்டை அசல் **வா.சா.ஆ.4** ஆகவும்

5. 28.09.2020 தேதியிட்ட பிரதிவாதியின் பதில் அறிவிப்பு சார்வு நகல் **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.